16th December 1959]

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir. One of the sheds in the school was blown away in a storm. There was no other damage.

(*b*) No, Sir.

(*c*) The matter is under examination.

SRI N. R. THIAGARAJAN : இந்த ஆசிரியப் பயிற்சி மாணவர்கள் தங்கள் பள்ளியில் ஒழுக்கல் ஏற்பட்டுவிட்டது என்று ஊரெங்கும் சென்று பிச்சை எடுத்துக் கொண்டிருந்தார்கள். இந்தப் பள்ளியை மோசமான இடத்தில் வைத்திருப்பதை நல்ல கட்டிடத்திற்கு மாற்ற அரசாங்கம் முயற்சி செய்யுமா ? வைகை அணைக் கட்டுப் பகுதியில் உள்ள கட்டிடங்களுக்கு மாற்றுதல் நலமல்லவா.

THE HON. SRI C. SUBRAMANIAM : ஒரு ஸ்கூல் கட்டிடம் போய்விட்டது என்பதற்காக பள்ளிக்கூடத்தை அந்த இடத்திலிருந்தே மாற்ற வேண்டுமா என்று யோசிக்க வேண்டும். போதுமான சௌகரியம் இல்லையென்று சொன்னால் வேறு இடத்திற்கு மாற்றுவதைப்பற்றி யோசிக்கலாம்.

Guineaworm disease

* 223 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is any scheme submitted to the Union Government to eradicate Guineaworm disease;

(*b*) if so, whether the same has been approved by the Union Government; and

(*c*) the cost and other details of the scheme?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) Yes, Sir.

(*c*) A paper[a] is placed on the table of the House.

SRI T. SAMPATH : What is the basic cause for this disease? Is it due to scarcity of water?

THE HON. SRI M. A. MANICKAVELU : It is due to the presence of some germs in the water, cyclopsis, and that gets into the system and produces the disease.

SRI S. M. ANNAMALAI : இந்த நரம்புச் சிலந்தி நோயானது எந்தெந்த கிராமத்தில் இருக்கிறதென்று சர்வே செய்யப்பட்டதா ? அப்படியானால் இந்தத் திட்டத்தின் கீழ் எந்தெந்த கிராமங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன ? இந்த நரம்புச் சிலந்தி நோயானது முக்கியமாகக் குடித்தண்ணீரினால்தான் உண்டாகிறது என்று சொல்லுகிறார்கள். அந்தத் தண்ணீர் சுத்தமாக இருக்க என்ன நடவடிக்கைகளைச் சர்க்கார் எடுத்திருக்கின்றனர் ?

---

a Printed as Appendix II on page 408 infra.

[16th December 1959

THE HON. SRI M. A. MANICKAVELU : இதற்குப் பதில் மேஜை மேல் வைத்திருக்கிறேன். அதைப் பூராவும் படித்தால் விவரம் தெரியும். மூன்று ஜில்லாக்களில் இந்த நோய் அதிகமாக இருக்கிறது. தென்னுற்காடு, திருச்சிராப்பள்ளி, வட ஆற்காடு ஆகிய ஜில்லாக்களில் அதிகமாக இருக்கிறது. இந்தத் திட்டத்தின் பிரகாரம் நோய் இருக்கும் எல்லாக் கிராமங்களிலும் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

9–30 a.m. SRI P. G. MANICKAM : மேஜையின் மீது வைக்கப்பட்டிருக்கும் குறிப்பிலிருந்து இதற்கென்று ஸ்பெஷல் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறுர்கள் என்று தெரிகிறது. இந்த ஸ்பெஷல் அதிகாரிகள் எந்தெந்த ஜில்லாவிலே வேலே செய்து வருகிறுர்கள். அவர்களுடைய வேலேத்திறனேப் பற்றி ஜனங்கள் அறிய எவ்வாறு பிரசாரம் செய்யப்படுகிறது.

THE HON. SRI M. A. MANICKAVELU : இன்னும் அவர்கள் வேலேக்குப் போகவில்லே. ஆகையால் அவர்களுடைய திறனே மதிப்பிடமுடியாது. அவர்களுக்கு இப்பொழுது பயிற்சி அளிக்கப் படுகிறது. பயிற்சி முடிந்த பிற்பாடு அவர்களெல்லாம் வேலேக்குப் போவார்கள்.

SRI V. SUBBIAH : நரம்புச் சிலந்தி வியாதியானது அநேகமாக கிணறு இல்லாத இடங்களிலே மழைத் தண்ணீர் தேங்கியிருக்கிற இடங்களில் அந்தத் தண்ணீரை குடிப்பதால் தான் வருகிறது என்பது உண்மையா? அப்படியானுல் அம்மாதிரி இடங்களில் கிணறுகள் வெட்டிக்கொடுக்க ஏதாவது முயற்சி செய்யப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : அம்மாதிரி இடங்களில் தண்ணீரில் கால் பட்டால்தான் அதில் பூச்சி கலந்துவிடுகிறது. ஆகவே, காலேவைத்து இறங்காமல் கயிறு, தோண்டி போட்டு ஜலத்தை எடுப்பதற்கும், மற்றபடி அதில் கிருமிகள் கலக்காமல் இருப்பதற்கு மருந்து தெளித்தும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

SRI A. V. P. ASAITHAMBI : நரம்புச் சிலந்தி நோய் பரவியிருக்கும் இடங்களில் முதல் சிகிச்சையாக இம்மாதிரி மருந்து தெளிப்பதற்கு ஏதாவது அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதுபற்றி மேற்கொண்டு பரீட்சித்துப் பார்த்துத் தான் இம்மாதிரி நடவடிக்கைகளே எடுத்துக்கொண்டால் அந்தப் பூச்சிகளே கொன்றுவிடலாம் என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். மேலும் அம்மாதிரி குடிக்கும் தண்ணீரை தடிப்பான துணி கொண்டு வடிக்கட்டி குடித்தால் ஓரளவுக்கு பூச்சி உள்ளே போகாமல் செய்யலாம்.

SRI T. K. SUBBIAH : நாஷனல் வாடர் சப்ளே திட்டத்தை நரம்புச் சிலந்தி நோய் பரவியுள்ள இடங்களுக்கு விஸ்தரித்தால், இந்த நோய் பரவாமல் தடுக்க முடியும். அம்மாதிரி விஸ்தரிப்பதற்கு தடங்கல் செய்வதற்கு என்ன காரணம்?

16th December 1959]

The Hon. Sri M. A. MANICKAVELU : அந்தத் திட்டத்தை இந்த இடங்களுக்கு விஸ்தரித்தால் மட்டும் போதாது. அம்மாதிரி நோய் வராமல் தடுப்பதற்கு நான் சொன்ன மாதிரி நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அம்மாதிரி நடவடிக்கைகள் எடுத்துக்கொண்ட பிற்பாடு அநேகமாக இந்த நோய் இல்லாமல் தடுக்கப்பட்டு விடும்.

Sri A. GOVINDASAMY : குளங்களில் தேங்கியிருக்கும் தண்ணீரை குடிப்பதினால் இந்த வியாதி வருகிறது. தேத்தாங் கொட்டை போட்டு தெளியவைத்து குடித்தாலும் அந்த வியாதி வந்துகொண்டிருக்கிறது. அம்மாதிரி தேங்கியிருக்கும் தண்ணீரை கிராமத்து மக்கள் குடிக்கவேண்டியிருப்பதால் அந்த வியாதி பரவுகிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை உடனடியாக அந்த இடங்களுக்கு விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்குமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இம்மாதிரியான நோய் வரக்கூடிய நிலைமை இருக்கிற இடங்களிலே தண்ணீரில் இறங்கி தண்ணீரைத் தொட்டு தண்ணீர் எடுக்காமல், வேறு முறையில் தண்ணீர் எடுத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யும் திட்டம் இருக்கிறது.

The Tiruchirappalli Kaieruvaram and Mattuvaram Act, 1958.

*224 *Q.*—**Sri S. M. ANNAMALAI** : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

மாட்டு வாரம் கையேறு வாரம்தார்கள் பாதுகாப்புச் சட்டத்தை மா நிலம் பூராவும் விஸ்தரிக்கும் திட்டம் உண்டா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : No, Sir.

Sri S. M. ANNAMALAI : இந்த மாட்டு வாரம் கையேர் வாரம் தார்கள் வேறு மாவட்டங்களில் வேறு பெயர்களில் இருக்கிறார்கள். ஆகையினால், அந்தக் காரணத்தையொட்டி இந்த சட்டத்தை மாநிலம் பூராவும் அமுல் செய்வதற்கு சர்க்கார் முன்வருவார்களா? இதுபற்றி பரிசீலனை செய்வார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : மாட்டு வாரம், கையேறு வாரம் என்ற பழக்கம் திருச்சி ஜில்லாவில் ஒரு பகுதியிலே தான் இருக்கிறது. அதுவும் சுமார் 43 கிராமங்களில்தான் இருக்கிறது. மற்ற இடங்களில் வேறு பெயர்களுடன் இருந்தால், அந்தப் பழக்கத்தில் இதிலுள்ள எல்லா அம்சங்களும் இருக்காது, ஒன்று, இரண்டு அம்சங்கள்தான் இருக்கும். இந்த சட்டத்தின் நோக்கம் இம்மாதிரியான வாரம் இருக்கும் இடங்களில்தான் இதை அமுல் செய்யவேண்டும் என்பது. வேறு இடங்களில் வேறு மாதிரியாக இருந்தால், அந்த இடங்களுக்கு இந்த சட்டத்தை விஸ்தரிப்பதற்கு உத்தேசம் இல்லை.